## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை - 2021

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் 1.2.2 பந்தியின் (ஈ),(உ),(ஊ),(எ),(ஏ),(ஐ),(ஒ),(ஔ),(கா) அவதானிப்புக்கள் தவிர முனனைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டிற்கு முன்பு காணப்பட்ட சபைக்கு சொந்தமான காணி கட்டிடம், ஒழுங்கைகள், மதகுகள், பாலங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பரிசோதித்து சரியான கணக்கு வைப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான காணி உரித்து இல்லாத மற்றும் காணிகளின் பெறுமதி கணிக்கப்படாத 15 காணிகளின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி உரித்து இல்லாத மற்றும் காணிப் பெறுமதி இல்லாத காணிகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்ய எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் நிதி கூற்றுக்களின் குறிப்பு 16 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் நடைமுறை வேலைகளாக கட்டிடங்களின் பெறுமதி ரூபா 19,872,678 மற்றும் வீதிகள் மற்றும் மதகுகள் ரூபா 12,949,006 ஆக குறிப்பிடப்பட்டிருந்தும், சபையின் நகர பொறியியளாலரின் உறுதிப்படுத்தலுக்கமைய 2021 திசெம்பர் 31 | நடைமுறை வேலைகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் தொகையான ரூபா 19,872,678.00 ஆன தொகை 16 ஆம் இலக்க குறிப்பின் கீழ் தவறுதலான குறைபாடொன்றின் காரணமாக குறிப்பிடப் பட்டிருந்ததுடன் அவ் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் திகதியில் நடைமுறை வேலைகள் இல்லையென அவதானிக்கப்பட்டது. | வேலைகள் பூரணமாக பூர்த்தியாக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டு சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | சபைக்குரிய உததியோகபூர்வ விடுதியொன்றிற்கு வழங்கப்பட்ட தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் சரியான பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை. | சபைக்கு உரித்தான சகல விடுதிகளிலும் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் உட்பட ஏனையவைகளும் தனிதனியாக இருப்பு வைக்குமாறு உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் அவற்றை கணக்கீடு செய்யப்பட உள்ளது. | - மேற்படி - |
| (உ) | ஜனஜய சிட்டி செயற்திட்டத்திற்காக நவலோக்க கன்ஸ்ரக்ஷன் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,488,509 மற்றும் தாமத கட்டணம் ரூபா 29,631,518 மற்றும் நிறுத்திவைத்தல் தொகை ரூபா 84,399,312 என ரூபா 115,519,339 கூட்டுத்தொகை 2021 திசெம்பர் 31 இல் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பினூடாக 2022 ஆம் ஆண்டி உட்படுத்தி சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஊ) | 2020 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மூலதன உரித்து மானியமான ரூபா 31,339,815 தொகையில் 2021 ஆம் ஆண்டிற்காக காலக்கழிவு செய்யப்பட வேண்டிய பெறுமதி ரூபா 3,133,982 தொகை குறைக்கப்பட்டதன் பின் எஞ்சிய மீதியான ரூபா 28,205,833 மற்றும் 2021 இல் மூலதன மானியம் ரூபா 39,257,979 இன் கூட்டுத்தொகையான ரூபா 67,463,812 ஆன சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் உரித்துக்களின் கீழ் இனங்காணப்படாத மூலதன செலவு மானியமாக குறிப்பிடப்பட வேண்டியிருந்தும் அது ரூபா 63,100,671 ஆக தேறிய உரிமை ரூபா 4,363,141 தொகையினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இக்குறைபாடு மேலே க இன் கீழ் காணப்படும் குறைபாடுகளுடன் 2022 ஆம் ஆண்டின் கணக்கு தயாரிக்கும் போது சீர் செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (எ) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட நீர் நிர்மாண வேலைகளுடன் தொடர்பான (W/W/A/01/01) ரூபா 561,772 பெறுமதியான 19 வகை பொருட்கள் களஞ்சியசாலை பேரேட்டிற்கு அமைய உரிய செயற்திட்டத்திற்கு வழங்கப்படாது இருப்பில் காணப்பட்டே பாதும் | அத்தொகை மொறகொல்ல வீட்டுத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டதுடன் நிர்மாணி வேலைகள் பூர்த்தியடையாமையால் இப்பொருட்கள் எஞ்சியள்ளது. | - மேற்படி - |

மீளாய்வாண்டின் இறுதி நீர நிர்மாண வேலைகளின் இருப்பில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. அப்பெறுமதியினால் இருப்பு குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காண்பிக்கும் பெறுமதி மற்றும் அட்டவணைகளுக்கிடையே ரூபா 33,998,683 ஆன வேறுபாடு காணப்பட்டது. | சீர் செய்ய நடவடிக்கைகள் எடுப்பேன் | ஆவணங்கள் மற்றும் பட்டியல்கள் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,641,883 பெறுமதியான இனங்காணப்படாத ஊழியர்கடன் மீதி கணககிற்கு மாற்றுவதற்கு தேவையான விரிவான அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்கள் பரீட்சிக்கப்பட்டு வருகின்றது. | உரிய பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 161,796,825 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 102,549,081 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 59,247,744 ஆல் அதிகரித்திருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வங்கி நடைமுறைக் கணக்கு திசெம்பர் 31 ஆம் திகதியில் வங்கி கணக்கிணக்க கூற்றுக்கு அமைய வங்கிக்கட்டணம் மற்றும் நேரடி வைப்புக்களின் | வங்கிக்கட்டணம் மற்றும் நேரடி வைப்புக்கள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள | மேலதிகமாக செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் மீண்டும் |

| | | |
|---|---|---|
| கூட்டுத்தொகை ரூபா 140,047 ஆக காணப்பட்டதுடன் அந்த மீதியானது சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கொடுக்கல் வாங்கள்களுக்கு உரிய பிரிவினர் தற்போது இனங் காணப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட கொடுப்பனவை மீண்டும் சபைக்கு அறவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றது | அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீத வரி** | | |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீதவரி மீதி ரூபா 136,885,146 ஆக இருந்ததுடன் அவற்றில் வருடாந்த வீதவரி வரிப் பெறுமதி ரூபா 50,000 இனை மிகைத்த வீடுகள், வெற்றுக் காணிகள் மற்றும் 295 வியாபார நிலையங்களிலிருந்து ரூபா 40,817,645 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. இந்த வீத வரித் தொகை 2022 ஜுன் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீதவரி மீதியில் உள்ளடங்கியுள்ள வருடாந்த வீதவரி பெறுமதி ரூபா 50,000 இனை மிகைத்த வீடுகள், வெற்றுக் காணிகள் மற்றும் வியாபார நிலையங்கள் 44 இலிருந்து ரூபா 4,893,000 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையை அறவிடுவதற்காக இருதி அறிவித்தல் வழங்கப்பட்டிருப்பதுடன் எதிர்காலத்தில் நடமாடும் சேவை மற்றும் சொத்துக்களை தடை செய்யும் நடவடிக்கைகள் மூலம் வீதவரி நிலுவையை அறவிட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் கடந்த நாலங்களில் ஏட்பட்ட கொரோனா நிலமையினால் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக திட்டமிப்பட்டிருந்த நடமாடும் சேவை மற்றும் சொத்துகளை தடை செய்யும் வேலைகள் பிற்போடவேண்டி ஏற்பட்டது. | நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) கடை வாடகை** | | |
| மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய மொத்த கடை வாடகை வருமானம் ரூபா 31,866,491 ஆக இருந்தது. | நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு தேவையான செயல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேல் - |

**(இ) உத்தியோகபூர்வ விடுதி வாடகை**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய விடுதி வாடகை பெறுமதி ரூபா 84,843 ஆக இருந்ததுடன் அதில் காணப்படும் 5 இற்கும் 10 இற்கும் இடைப்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 79,430 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | அறவிடப்பட வேண்டிய விடுதி வாடகையை பதிவழிப்பதற்கு ஆலோசனையை வேண்டி 2015.12.28, 2018.09.30, 2019.12.07 ஆந் திகதிகளில் உள்ளராட்சி ஆணையாளர் (மே.மா) பிரதியுடன் உதவி உள்ளுராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

**(ஈ) களியாட்ட வரி**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் இரண்டு சினிமா அரங்குகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய களியாட்ட வரி மீதி ரூபா 3,169,717 ஆக இருந்ததுடன் அதில் காணப்படும் 5 இற்கும் 10 இற்கும் இடைப்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 2,781,680 தொகையை 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 2,781,679.16 தொகையை அறவிட முடியவில்லை. | - மேற்படி - |

**(உ) கழிவுப்பொருள் வெளியேற்றும் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் இறுதியில் சபை அதிகார எல்லைக்குற்பட்ட வியாபார நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய கழிவுப்பொருள் வரி மீதி ரூபா 4,097,526 ஆக இருந்ததுடன் அதில் காணப்படும் 1 இற்கும் 3 இடைப்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 1,267,376 தொகையை 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிலுவையாக காணப்பட்டது. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு தேவையான செயல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

**(உ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு தொடர்பில் பட்டியலிடப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 226,101,938 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 323,378,363 ஆகும். மேலும் மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,891,501 ஆக காணப்படுவதுடன் அவற்றில் 5 | நீதிமன்ற தண்டப்பணத்தை அறவிடும் நடவடிக்கை மேற்கொள்வதற்கு முடியாதுள்ளது. | - மேற்படி - |

தொடக்கம் 10 வருடங்கள் வரையான காலத்திற்குரிய ரூபா 879,787 ஆகவும் மற்றும் 10 வருடங்களை விஞ்சிய காலத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 3,011,713 ஆகவும் இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கள் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2016 பெப்ரவரி 16 ஆம் திகதி ரூபா 619,276,616 ஒப்பந்தப் பெறுமதிக்க பிடகோட்டே ஜயரஜசிட்டி கலப்பு அபிவிருத்தி செயற்திட்டம் நிர்மாணிப்பது தொடர்பாக தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவருடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பான மதியுரைக் கட்டணமாக ரூபா 2,638,191 மற்றும் நிர்மாணிப்பு தொடர்பில் ரூபா 255,707,477 தொகை செலவிடப்பட்டிருந்தும் 2018 செப்தம்பர் 10 ஆம் திகதி ஒப்பந்தக்காரர் வேலைத்தளத்தினை கைவிட்டிருந்தனர். | ஜயரஜசிட்டி கலப்பு அபிவிருத்தி செயல்திட்டம் 2016 ஆம் ஆண்டு முன் விற்பனை முறையின் அடிப்படையில் அறக்கட்டளை நிதியை பெற்றுக் கொள்வதனூடாக உடன் முன்விற்பனை முறையினூடாக 30% ஆன தொகையை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடிந்ததுடன் அவ்வேலையில் செயல்திட்டத்தின் நிர்மாணிப்பு ஒரியண்ட் ஒப்பந்த நிறுவனத்தினூடாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. அங்கு நிர்மாணிப்பில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந்த நிறுவனத்தின் எஞ்சிய நிர்மாணிப்பு தொடர்பில் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும் சபை கலைக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டில் திட்டத்தினை நடாத்திச் செல்வதற்கு நிதி இல்லாமையால் நகர சபை ஆணையாளரினால் செயற்திட்டம் நிறுத்தப்பட்டது. நிதிச் சபையினால் நகர சபை பொறியியலளாரினால் திருத்தப்பட்ட விவேகமான திட்டத்தின் படி மீண்டும் இத்திட்டத்தினை ஆரம்பிப்பது தொடர்பாக முன்மொழிவொன்று நிதி குழுவிற்கு | செயற்திட்டத்தை திட்டமிட்டபடி விரைவாக பூர்த்தி செய்து திட்டங்கள் உரிய வகையில் செயற்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முன்வைக்கப்பட்டதுடன் நாட்டில் காணப்படும் பொருளாதார நிலைமையின் கீழ் எதிர்வரும் நடவடிக்கை எடுக்க முடியாது நிறுத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நவநகர சபை கட்டிட நிர்மாண செயற்திட்டம் கலைக்கூட நிர்மாண நடவடிக்கைகளுக்காக மதியுரைச் சேவை வழங்குவதற்காக 2015 ஜனவாரி 26 ஆம் திகதி ரூபா 36,010,657 தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததுடன் மதியுரைக் கட்டணமாக ரூபா 26,220,340 செலுத்தப்பட்டிருந்தது. பின்பு காணியின் உரிமை சபைக்கு இல்லையென்பதனால் புதிய நகர சபை கட்டிட நிர்மாண செயற்திட்டம் சபையினால் கைவிடப்பட்டிருந்தது. அறவிட வேண்டிய எஞ்சிய தொகையை அறவிடுவதற்கு மதியுரைக் கம்பனியினால் சபைக்கு எதிராக ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் சபையினால் ரூபா 877,887 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் இந்த நிலுவைத் தொகையை செலுத்தாதனால் அதற்கான தாமத கட்டணம் ரூபா 11,468,913 அறவிடப்பட வேண்டி காணப்பட்டது. | இந்த நகர சபை கட்டிடம் நிர்மாணிப்பது தொடர்பாக 2013.03.28 தினத்திலிருந்த கௌரவ நகராதிபதியின் ஆலோசனையின் பேரில் வலிகட பொலிஸ் நிலையத்திற்கு அருகில் நிர்மாணிப்பதற்கு முன்மொழிவு 2013.06.28 திகதி மகா சபை தீர்மான இலக்கம் 06.01 இன் கீழ் மேலுள்ள காணி மகா சபை அலுவலக கட்டிடம் நிர்மாணிப்பதற்காக பொறியியலாளர் மதியுரையாளர்கள் மற்றும் கலை நிர்மாண கலைஞர்களை இணைத்துக் கொள்வதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதுடன் 2013.07.29 மகா சபை தீர்மான இலக்கம் 06.01 இன் கீழ் சபையினால் செயற்திட்டம் தொடர்பாக திட்டத்தினை வரைவு செய்வதற்காக பட்டய கலை நிரமான கலைஞர்களை பதிவு செய்வதற்கு சபையினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்த சபை தீர்மானத்திற்கமைய கேள்வி மனு அழைத்து மதிப்பீட்டு அறிக்கையின் னடி 2014.01.31 திகதி மகாசபையின் அனுமதியின்படி ரன்ஜன் நடேஷபிள்ளை அஷோஸியேட் நிறுவனம் தெறிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி காணி உரிமை சபைக்கு இல்லையென்பதனால் உரிய நிர்மாணம் சபையினால் கைவிடப்பட்டதானது அகற்றப்பட்டுள்ளது. | காணி உரிமையை பெற்றுக் கொண்டு செயற்திட்டத்தினை விரைவாக பூர்த்தி செய்து திட்மிட்டபடி நடைமுறைப்படுத்தல் வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 வாகன விபத்துக்கள் தொடர்பில் புதுப்பித்தல் செலவு ரூபா 127,700 தொகையை காப்புறுதியினால் ஈடுசெய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | காப்புறுதி நட்டஈடு அறவீடு செய்து கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

நாவல மயானம் மற்றும் மயான கட்டிடம் (பாலர்) நிர்மாணிக்கப்பட்டுள்ள பூமியை சுற்றி தற்போது காணப்படும் பாதுகாப்பற்ற சுற்று மதிலை அகற்றி புதிய பாதுகாப்பு மதிலின் ஒரு பகுதி நிர்மாணிப்பது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகை வழிகாட்டி கோவை 4.3.1(ஆ) இற்கு அமைய அனைத்து அண்மித்த செலவுகள் உட்பட செலவு மதிப்பீடொன்று பெறுகை சபையினால் தயாரிக்கப்பட வேண்டியிருந்தும் ஆரம்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட முழு மதிப்பீட்டுத் தொகை ரூபா 3,813,645 தொகையினுள் மயானத்திற்கு செல்லும் நுழைவாயில், பாதுகாப்பு அறை நிர்மாணித்தல், பிணஎரிப்பு அறை குமிழை மீண்டும் அமைத்தல் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்படும் புதிய காணியின் அளவு தயாரித்தல் போன்ற செலவுகள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப கட்டத்தில் பிரதேச செயலாளர் அலுவலகத்தினூடாக வழங்கப்பட்ட நிதிஒதுக்கீட்டிற்கு அமைய மாத்திரம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. | உரிய செயற் திட்டங்களின் நடவடிக்கைகள் ஒழுங்கு முறையாக செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மேற்படி (அ) பந்தியில் காட்டப்பட்டிருந்த செலவு உட்படுத்தியதன் பின்பு மீண்டும் மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த செலவு மதிப்பீடு ரூபா 5,372,345 ஆனாலும் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூபா 3,000,000 என்பதனால் அது தொடர்பான போதிய நிதிஏற்பாடு காணப்படாததனால் தேவையான எஞ்சிய நிர்மாண செலவுகள் தொடர்பில் நிதி ஏற்பாடு செய்வது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. | மொத்தச் செலவு மதிப்பீடு (VAT) உடன் ரூபா 5,372,345.00 ஆக இருந்ததுடன் அதன் பகுதியாக உரிய பன்முகப்படுத்தப்பட்ட உதவியின் கீழ் மதிலை நிர்மாணித்தல் கைத்தொழில் கட்டம் I, ii மற்றும் iii அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. நாவல மேற்கு பிரிவு (220 பீ) நாவல மயானம் மற்றும் மயான கட்டிடம் (பாலர்) நிர்மாணிக்கும் பூமியை சுற்றி | உரிய மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டினுள் இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் அது தொடர்பில் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு தெறியப்படுத்தியிருக்கவில்லை. 2021 பன்முகப்படுத்தப்பட்ட வரவு வெலவுத் திட்டத்தின் கீழ் இந்த செயற்திட்டம் தொடர்பில் ரூபா 3,000,000 தொகையொன்று அனுமதிக்கப்பட்டிருந்த காரணத்தினால் அத்தொகைக்கு சரியாகும் விதத்தில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அங்கு மொத்த செலவும் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டினை விட விஞ்சிக் காணப்பட்டது. | தற்போது காணப்படும் பாதுகாப்பற்ற மதிலை அகற்றி புதிய பாதுகாப்பு மதிலை பகுதியளவில் நிர்மாணிப்பதற்கு 2021 பன்முகப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளில் ரூபா 3,000,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. | |
| (இ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தற்போது காணப்படும் கருங்கல் மதிலிலிருந்து 1.6 மீட்டர் பின்புறமாக நகர்த்தி கட்டப்பட வேண்டும் என அடையாளப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அந்தப்பகுதியை வாகனங்களை நிறுத்தும் தொகுதியொன்றாக பயன்படுத்தி பணம் அறவீடு செய்ய முடியுமெனவும் பொறியியலாளரினால் எழுத்து மூலம் தெரியப்படுத்தப் பட்டிருந்தது. அதன்படி 1.6 மீட்டர் பின்புறம் நகர்த்துவதற்கு பதிலாக 15 அடி பின் நகர்த்தி மதில் நிர்மாணிக்கப்படுவதாக 2021 நவெம்பர் 03 ஆம் திகதி கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் 1946 இன் 57 ஆம் இலக்க பொது மயானம் மற்றும் தனியார் மயானம் தொர்பில் கட்டளைச் சட்டத்தின் 11 ஆவது பந்தியில் 5(1) அமைவாக மயான பூமி அளவை குறைத்தல் அல்லது வேறு வகையில் மாற்றம் செய்தல் தொடர்பில் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கலில்லை. | இந்த செயல்திட்டம் இன்னும் வேலை முடிக்கப்படாத செயல் நிலையில் காணப்படும் திட்டமொன்றாக இருப்பதால் இந்த சகல அவதானிப்புகளுக்கு இயைபாகும் வகையில் செயற்திட்டத்தின் எஞ்சிய நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளது | முறையாக தேவையான அனுமதி மற்றும் உடன்பாட்டுடன் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | காணப்படும் மதிலிலிருந்து நிர்மாணிக்கப்படும் புதிய மதில் 15 அடி பின்புறமாக நகர்த்தி எடுப்பதனால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்படும் காணியின் அளவு எதிர்காலத்தில் பெறப்படும் பயன்பாடு தொடர்பில் தெளிவான உடன்பாடொன்று | பதிலளிக்கப்படவில்லை. | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| இல்லமையுடன் அந்த காணி அளவை சீர்செய்வதற்காக எந்தவொரு திட்டமும் மதிப்பீட்டில் காணப்படவில்லை. அது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் எந்தவொரு உடன்பாட்டிற்கும் வந்திருக்கவில்லை. | | |

## 3.4 விளைவற்ற அல்லது குறைபயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டில் ரூபா 2,825,375 தொகை செலவில் அச்சிடப்பட்ட அற்புதமான கோட்டை எனும் பதிப்பு 4000 பிரதிகளில் 3891 பிரதிகள் களஞ்சியத்திக்கு கிடைத்திருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் முடிவில் 178 பிரதி மற்றும் ரூபா 155,750 பெறுமதியான அப்புத்தகங்களின் அட்டைகள் 192 என்பன களஞ்சியசாலையில் செயலற்று காணப்பட்டன. | களஞ்சியத்தில் எஞ்சியிருக்கும் அற்புதமான கோட்டை எனும் பதிப்பு மாணவ மாணவிகளின் வாசிப்பு பழக்கத்தினை அபிவிருத்தி செய்வதற்கு அரச பாடசாலைகள் மற்றும் அரச நூலகங்கள் தொடர்பில் பெற்றுக் கொடுப்பதற்கு பொருத்தமான வேலைதிட்டமொன்று தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. | வளங்களினூடாக உச்ச பயனை பெற வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

சபைக்குச் சொந்தமான பொது கிணறு எனும் ஆதனம் மீண்டும் கொள்வனவு செய்தல

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபைக்குரிய ஸ்டன்லி திலகரத்ன மாவத்தை இலக்கம் 285/பீ உடைய 01.75 பேர்ச் பொதுக் கிணறு எனும் ஆதனம் மீண்டும் கொள்வனவு செய்யும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் சபை உத்தியோகத்தர்கள் பங்குபற்றியதாக அவதானிக்கப்பட்டதுடன் சபை ஆதணம் 2019 ஜுன் 24 ஆம் திகதி ரூபா 1,575,000 இற்கு வெளிநபரொருவருக்கு விற்பனை செய்து அந்நபருக்கு உரிமையை வழங்குவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | பிரச்சினைக்குரிய இந்த ஆதளம் 1979 ஆம் ஆண்டு தொடக்கம் முன்னோர்களிடமிருந்து கிடைத்த ஆதனம் என தகவல்கள் சமர்ப்பிக்கும் வேலை குறிப்பிட்டிருந்தாலும் 1979 இற்கு முன்னர் வீத வரி கோவைப்படி உரிய ஆதனம் தொடர்பில் குறிப்பொன்றில்லை. அதன்படி ஆதனம் முன்னோர்களிடமிருந்து அல்லது கையேற்பதினூடாக சபைக்குரியதானதாகவும் அவதானிக்கப்படவில்லை. உரிய ஆதன இலக்கம் 2048 மற்றும் 1979.06.10 | விரைவாக பொருத்தமான நடவடிக்கை எடுத்து சபைக்கு நட்டம் ஏற்படாதவாறு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| | திகதியுடைய பதிவுப்படி பொதுக் கிணறு மற்றும் மயானம் என வேறாக்கப்பட்ட சபைக்குரிய காணித்துண்டொன்று என அரச கணக்காய்வின் மூலம் குறிப்பிடப்பட்டிருந்தாலும் சபையிடம் எந்தவொரு ஆவணமும் ஒரு ஆதனம் சபையின் அட்டவணைப்படுத்தப்பட்ட மயான பூமியாக இனங்காணப்பட்டும் அல்லது ஆவணப்படுத்தப்பட்டும் இல்லை. |
| (ஆ) மேலுள்ள குறிப்பிட்ட காணி சபையின் 2016/2017 வருடத்திற்கான வீத வரி வரி ஆவணங்களில் ஸ்டன்லி திலகரத்ன மாவத்த, இல.285 பீ, 01.75 பேர்சஸ் காணித் துண்டு வீதவரி ஆவணம் இலக்கம் 12 இன் கீழ் கோட்டே மா நகர சபைக்குரிய பிரசித்தமான கிணறு என குறிப்பிடப்பட்டிருந்தது. 2018/2019 வருட வீத வரி ஆவணங்களில் 10 நபர்களின் பெயர்கள் எழுதப்பட்டு சிவப்பு மையினால் கீரிடப்பட்டு அகற்றப்பட்டிருந்ததுடன் 2020/2021 வீதவரி வரி ஆவணத்தில் பொது கிணறு என குறிப்பிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | அவ்வாறு சிவப்பு மையினால் குறிப்பிட்டது முன்னைய உரிமை மற்றும் தற்போதைய உரிமை என்பவற்றை தெளிவாக காண்பிப்தற்காவும் அது இந்நிறுவனத்தின் அன்றிலிருந்து இன்று வரை நடாத்திச் சென்ற சாதாரண முறையாகும். அதன்படி மேலுள்ள ஆதனத்தின் உரிமையை முன்வைக்கும் உரித்தின் சாராம்சப்படி புதிய உரிமையை ஆவணப்படுத்தும் போது முன்பிருந்த உரிமையை சிவப்பு மையால் கீரிட்டு ஒதுக்கி 10 நபர்களின் பெயர்களும் சிவப்பு மையினால் ஆவணங்களில் உட்படுத்தப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேல்மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் 2021 நவம்பர் 10 ஆந் திகதிய LGD/02/2021 சுற்றறிக்கையின் பிரகாரம் 2021 ஆம் நிதியாண்டிற்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனைத்து கணக்குகளும் தீர்வுசெய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து அதற்குரிய நிதிக்கூற்றுத் தொகுதிகள் 2022 பெப்ரவரி 28 | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இறுதிக் கணக்கு முறை இந்த ஆண்டின் போது மாற்றப்பட்டமை மற்றும் | இறுதிக் கணக்குகள் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

ஆந் திகதிக்கு முன்னர் உள்ளுராட்சி மன்ற ஆணையாளர் மற்றும் உள்ளுராட்சி மன்ற உதவி ஆணையாளர் ஆகியோருக்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகர சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான திருத்திய கணக்குகள் 2022 மே 24 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது

பிரதான கணக்காளர் இடமாற்றம் பெற்றுச் சென்றமை காரணமாக இருந்தது